**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாரூர்**

**2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21-ம் நாள் புதன்கிழமை**

**O.S. 48/2022**

**வாதி தரப்பு சாட்சியாகிய PW1-ன் வாக்குமூலம் (1969 -ம் ஆண்டின் 44 -வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. S. விஜய் ஆனந்த், B.E., B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **: ஆனந்தகிருஷ்ணன்** | **தாலுக்கா** | **: --** |
| **த/பெ** | **: ஜெயராமன்** | **கிராமம்** | **: திருவாரூர்** |
| **ஜாதி** | **: --** | **தொழில்** | **: எலக்ட்ரிகல்** |
| **சமயம்** | **: இந்து** | **வயது** | **: 46** |

**முதல் விசாரணை**

நான் இந்த அசல் வழக்கில் 4ம் வாதி ஆவேன். மற்ற வாதிகளுக்காகவும் நான் சாட்சியம் அளிக்கிறேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள விபரங்கள் அனைத்தும் நான் சொல்லித்தான் தயார் செய்யப்பட்டது. மேற்படி நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 09.11.1986 ம் தேதியிட்ட எனது தந்தையாரின் தாயார் புஷ்பவள்ளி அம்மாள் எழுதி வைத்த உயில் ஆவணம் சான்றிட்ட நகல் தாக்கல் செய்யப்படுகிறது. கடந்த 15.05.1987 ம் தேதியிட்ட மேற்படி புஷ்பவள்ளி அம்மாள் அவர்களின் இறப்புச் சான்றிதழ் நகல் தாக்கல் செய்யப்படுகிறது. **(கடந்த 23.11.2016 ம் தேதியிட்ட தாவா சொத்தை பொறுத்து எனது தாயார் பெயரில் உள்ளதை காட்டக்கூடிய நகர அளவை பதிவேடு உண்மை நகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (தாவா சொத்திற்கான வரைபடம்**

**உண்மை நகல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (கடந்த 2020-2021 மற்றும் 2021-2022 ஆகிய வருடங்களுக்கு தாவா சொத்தை பொறுத்து திருவாரூர் நகராட்சிக்கு எனது தாயார் பெயரில் செலுத்திய வரி ரசீதுகள் (எண்ணம் 2) வா.சா.ஆ.3 ன் வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது). (கடந்த 04.06.2022 ம் தேதியிட்ட தாவா சொத்திற்கு எனது தாயார் பெயரில் ஏற்பட்ட மின் கட்டண ரசீது அசல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (கடந்த 13.07.2016 ம் தேதியிட்ட எனது தாயார் கனகாம்புஜம் எனது சகோதரி மீனாட்சி பெயரில் எழுதி வைத்த தான செட்டில்மெண்ட் உண்மை நகல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

**முதல் விசாரணை தொடர்ச்சிக்காக வேண்டுகோளின்படி ஒத்தி வைக்கப்படுகிறது.**

ஒம் /- S. விஜய் ஆனந்த்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவாரூர்.